# "இலங்கை இன முரண்பாட்டிக்கான சமாதானத் தீர்வு முயற்சியில் இந்தியாவும் நோர்வேயும் வகித்த பங்களிப்பு:

**வே. குணரத்தினம்**
*சமூக விஞ்ஞானத்துறை*
*கிழக்குப்பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்**

## *01* அறிமுகம் :

பல்லின சமுதாய அமைப்பைக்கொண்ட ஒரு நாட்டில் இனங்களின் உறவு நிலைகளில் ஏற்படும் பகையுணர்வுகள் இனமுரண்பாடுகளை தோற்றுவித்துவிடுகின்றன. அதாவது இனங்களுக்கிடையே கருத்து வெளிப்பாடு, கொள்கை, செயற்பாடு என்பன வேறுபட்டு வெளிக்காட்டப்படும் போது அங்கு இனமுரண்பாடு என்பது ஏற்பட்டு விடுகின்றது. அந்நாடுகளின் கடந்தகால, நிகழ்கால அரசியல் அவதானிப்புக்களின் ஊடாக இதனை அவதானிக்க முடிகின்றது. இலங்கையும் ஒன்றிற்குமேற்பட்ட பல இனங்களின் வாழ்விடத்தளமாக இருப்பதனால் இந்த பல்லின சமூக அமைப்பில் வழிவந்த பிணக்காகவே இனமுரண்பாடும் தோற்றம் பெற்றன. இது இருபதாம் நூற்றாண்டிலும் இருபத்தியொராம் நூற்றாண்டிலும் இலங்கை அரசியல் வாழ்வில் பிணைந்துவிட்டதொரு ஆழம் மிகுந்ததொரு நெருக்கடியாகும்.

இலங்கையின் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு காலத்திற்குக் காலம் எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறத் தவறியதன் விளைவு இம்முரண்பாட்டை மேலும் மேலும் ஆழமாக்கியதுடன் அது தேசிய நெருக்கடியாகவும் உருவெடுத்தள்ளது. இம்முரண்பாடு உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்தபோதிலும் பிற்காலத்தில் சர்வதேச தலையீட்டுக்கும் உட்பட்டதாகவும் காணப்படுகின்றது. அந்தவகையிலே இலங்கையின் இனமுரண்பாட்டின் தீர்வு முயற்சியில் இந்தியாவும் நோர்வேயும் பங்காளிகளாக பங்குபற்றியது.

## *1.1* – ஆய்வின் முக்கியத்துவம் :

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையீடு செய்துகொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் இந்தியா நேரடியாக மத்தியஸ்தம் வகித்து பேச்சுவார்த்தையில் இறங்கியது. இந்த முயற்சி வெற்றியளிக்க முடியவில்லை. பின்னர் இனமுரண்பாடு கூர்மையடைந்த பொழுது நோர்வே தீர்வு முயற்சியில் அனுசரணையாளராகத் தொழிற்பட்டது. இம்முயற்சியும் வெற்றியளிக்க முடியாமல் போய்விட்டது. எனவே இம்முயற்சிகள் எல்லாம் வெற்றியளிக்க முடியாமல் போனதற்கான காரணங்கள் பற்றி ஆராய வேண்டியது அவசியமாகும். அத்துடன் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதும் காலத்தின் தேவையாகும்.

## 1.2 – ஆய்வின் நோக்கங்கள் :

1. இனமுரண்பாட்டுத் தீர்வுக்கு இரு நாடுகளும் எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளது என்பதை இனங்காணல்.
2. இன முரண்பாட்டுத் தீர்வு முயற்சியில் தோல்வி அடைந்ததற்கான காரணங்களை அடையாளம் காணல்.
3. அதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

## 1.3 – ஆய்வு முறையியல் :

இவ்வாய்வானது தொகுத்தறி முறையிலான விபரண ரீதியான பகுப்பாய்வு முறையாக அமைகின்றது. முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளாக ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தை அறிக்கைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1.4 – முடிவுரை :

ஒரு நாட்டில் பெரும்பான்மையினம் சிறுபான்மை இனத்திற்கு பாதகமாக நடக்குமிடத்து அல்லது அரவணைத்துச் செல்லத்தவறினால் சிறுபான்மை இனம் தமக்கென அரசியல் நிறுவனத்தை உருவாக்கி தமது தனித்துவத்தை பேணிக்கொள்ள முற்படும். பெரும்பான்மையினமான சிங்கள இனம் மேலாண்மைப் போக்கை வலுப்படுத்திச் சென்றமையால் சிறுபான்மையினமான தமிழினத்தின் மிதவாத அணுகுமுறை தீவிர நோக்கத்தோடு உருமாற்றம் பெற்றது எனலாம். இதனால் தாக்குதல், எதிர்த்தாக்குதல் என்ற வகையில் இனமுரண்பாடு புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது.

இனமுரண்பாட்டின் பங்காளிகளிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், புரிந்துணர்வும் அவசியமாகும். ஆட்சியதிகாரத்திற்கு இரு பிரதான கட்சிகளும் ஏனைய அரசியல் கட்சிகளும் இலாபத்தினை கருத்திற்கொள்ளாது கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டு நலன் கருதி செயற்பட வேண்டும். ஜனநாயக வழிக்கு வந்துள்ள தமிழ் கட்சிகளின் கருத்துக்கு உரிய இடத்தினை அரசாங்கம் வழங்க வேண்டும். சமாதான முயற்சியில் ஈடுபடுகின்ற நாடுகளும் தனது நாட்டின் நலன், ஆதிக்க நலன் கருதாது உண்மைத்தன்மையுடன் செயற்பட வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான சமாதானத்தை இலங்கையில் கட்டியெழுப்ப முடியும் எனலாம்.